## இனங்காணப்பட்ட நிர்மாணப் பணி

## 2014 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க

## நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டம்

2014 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் அமுலாக்கம் பற்றி நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளரால் பிரசுரிக்கப்படும் அறிவுறுத்தல்.

இனங்காணப்பட்ட நிர்மாணப் பணிகளை நிறைவேற்றும் போது நிர்மாணக் கைத்தொழிலில் உள்ள அனைத்து பங்குதாரர்களும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் கீழ்வரும் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும் என்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஆகையால், இங்கே குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, கீழ்வரும் தேவைப்பாடுகளுடன் நிர்மாணக் கைத்தொழிலில் உள்ள அனைத்து பங்குதாரர்களும் இணங்கியொழுக வேண்டும் என்று இத்தால் அறிவிக்கப்படுகிறது:

### பிரிவு 28

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, ஒப்பந்த ஆவணங்களின் வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு மற்றும் ஏதேனுமோர் இனங்காணப்பட்ட நிர்மாணப் பணியின் மேற்பார்வை ஆகியவற்றின் நோக்கத்துக்காக தகைமையுள்ள ஓர் ஆளைத் தவிர்ந்த ஆளெவரும் நியமிக்கப்படலாகாது அல்லது அவற்றை நிறைவேற்றுவதில் ஈடுபடலாகாது.

### பிரிவு 29

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் 29 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, இனங்காணப்பட்ட நிர்மாணப் பணி பற்றிய பதிவுகளை நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை பேணுதல் வேண்டும்.

ஆகையால், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் 29 ஆம் பிரிவின் நோக்கத்ததுக்காக இலங்கையில் மேற்கொள்ளும் ஒவ்வோர் இனங்காணப்பட்ட நிர்மாணப் பணியின் தொழில் வழங்குநர் / சேவை பெறுநரும் அத்தகைய இனங்காணப்பட்ட பணி தொடர்பான ஏற்புக் கடிதத்தின் பிரதியொன்றை அத்தகைய ஏற்புக் கடிதத்தின் தினத்தின் ஒரு மாதத்துக்குள்ளால் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

(நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டதின் பொருள் கோடலுக்கிணங்க, இனங்காணப்பட்ட நிர்மாணப் பணி என்பது பொதுப் பாவனைக்கான பத்து மில்லியன் ரூபாய் பெறுமதியை விஞ்சும் (ரூபா10,000,000.00) அல்லது காலத்துக் காலம் அமைச்சரினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய உயர் பெறுமதியையுடைய ஏதேனும் நிர்மாணப் பணியைக் குறிக்கிறது.

**பிரிவு 31**

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் 31 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, ஏதேனும் இனங்காணப்பட்ட நிர்மாணப் பணிகளுக்கான கட்டிட அங்கீகாரத்துக்கான விண்ணப்பத்தை, எந்த உள்ளூராதிகார சபையும், அத்தகைய நிர்மாணம் தொடர்பான கட்டடக் கலை சார், கட்டமைப்பு, மின்சார மற்றும் நீர் இணைப்புகள், கழிகான் முறைமை ஆகியவற்றினதும் ஏனையவற்றினதும் வடிவமைப்புகளும் சேவைகளும் தகைமையுள்ள ஆளொருவரினால் மேறகொள்ளப்பட்டிருந்தாலொழிய ஏற்றுக்கொள்ளலாகாது.

**பிரிவு 38**

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, ஒவ்வோர் இனங்காணப்பட்ட நிர்மாணப் பணியும் அத்தகைய நோக்கத்துக்காக நிர்மாணக் கைத்தொழில் அதிகாரசபையினால் விதிக்கப்படக்கூடியவாறான நடைமுறைகளுக்கும் நியமங்களுக்கும் அமைவாக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட ஓப்பந்தக்காரர் ஒருவரினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் விநியோகிக்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் ஒன்று இல்லாமல் ஏதேனும் இனங்காணப்பட்ட நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள பொறுப்பேற்கும் அல்லது மேற்கொள்ளும் எவரேனும் ஆள் குறித்த சட்டத்தின் கீழ் தவறொன்றிற்காக குற்றவாளியாக்கப்பட வேண்டும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**பிரிவு 46**

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் 46 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, ஏதேனும் இனங்காணப்பட்ட நிர்மாணப் பணியில் ஆலோசகர் ஒருவராக அல்லது பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்கார் ஒருவராக ஓர் ஆளை ஈடுபடுத்தும் ஏதேனும் தரப்பு, நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் அத்தகைய நோக்கத்துக்காக குறித்துரைக்கப்பட்டுள்ள நியம ஆவணங்களை பயன்படுத்துதல் வேண்டும்

**பிரிவு 56**

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தின் 56 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, குறித்த சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒழுங்குவிதியை மீறும் அல்லது அவற்றுடன் இணங்கியொழுகத் தவறும் எவரேனும் ஆள் குறித்த சட்டத்தின் கீழ் தவறொன்றிற்காக குற்றவாளியாக்கப்பட வேண்டும் என இத்தால் மேலும் அறிவிக்கப்படுகிறது.

**தவிசாளர்**
**நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை**
31.07.2017